# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

## 2013 – 2014ம் கல்வி ஆண்டிற்கான

## ***<u>உமறுபுலவர் முத்தமிழ் மன்ற அறிக்கை</u>***

08.07.2013 அன்று எம் கல்லூரியின் 2013-2014ம் கல்வி ஆண்டிற்கான மாணவப் பேரவை தொடக்க விழாவில் தூத்துக்குடி மாநகராட்சி இணையர் திருமதி S. மதுமதி IAS அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்கள். உமறுப்புலவர் முத்தமிழ் மன்றத்தின் மாணவியர் செயலாளராக இரண்டாமாண்டு பொருளியல் துறை மாணவி செல்வி மு. சுமிதா, மாணவியர் துணைச் செயலாளராக முதலாமாண்டு கணிதவியல் துறை மாணவி செல்வி தி. முத்து (எ) சத்யப்பிரியா ஆகியோர் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மன்றத்தின் துணைத்தலைவியாக தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை முனைவர். செல்வி. ச. சத்தியபாமா M.A., M.Phil., Ph.D., அவர்கள் பொறுப்பேற்றார்.

❖ எம் மன்றத்தின் தொடக்கவிழா 22.07.2013 அன்று நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக காமராஜ் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திரு. கந்தசாமி M.A., M.Phil., Ph.D., அவர்கள் பங்கேற்றார். எம் கல்லூரி முதல்வரும், மன்றத்தலைவியுமான முதல்வர் திருமதி வே. சசிகலா M.A., M.Phil., Ph.D., அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். “இலக்கியத்தில் இன்பம்” என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினர் சிறப்புரை ஆற்றினார்கள்.

❖ 16.12.2013 அன்று பாரதியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. விழாவின் சிறப்பு விருந்தினராக திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி மேனாள் தமிழ்த்துறை தலைவர் முனைவர் திரு. பாஸ்கர பால்பாண்டியன் M.A., M.A., M.Phil., Ph.D., அவர்கள் பங்கேற்று “பெரிதினும் பெரிது கேள்” எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி வே. சசிகலா M.A., M.Phil., Ph.D., அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள்.

❖ 27.12.2013 அன்று பாரதியார் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. இப்போட்டியின் நடுவர்களாக, கணிதவியல்துறை தலைவர் G. அமுதா அவர்கள், ஆங்கில இலக்கியத்துறை உதவிப்பேராசிரியை R. ஜோப்ரிட் ரொட்ரிகோ அவர்கள், தமிழ்த்துறை தலைவர் R. அருணாஜோதி

அவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். போட்டியில் 25 மாணவிகள் பங்கேற்றனர். முதல் இடத்தை முதலாமாண்டு கணிதவியல் துறை மாணவி தி. முத்து (எ) சத்யப்பிரியாவும், 2ம் இடத்தை முதலாமாண்டு கணிதவியல் துறை மாணவி ச. முத்துப்பிரியங்காவும், 3ம் இடத்தை ஆங்கில இலக்கியம் இரண்டாமாண்டு மாணவி ச. நிஸ்மத் நிஷாவும் பெற்றனர். மேலும் ஆறுதல் பரிசினை மூன்று மாணவிகள் பெற்றனர்.

❖ 21.02.2014 அன்று "உலகத்தாய்மொழி தினம்" கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நமது கல்லூரி முதல்வர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். மாணவிகள் தமிழ்மொழி பற்றிய பாடல்களைப் பாடினர். மேலும் உலகநாடுகளின் தாய்மொழி பற்றியும், தமிழ்மொழி பற்றியும் மாணவிகள் கட்டுரை வாசித்தனர். தாய்மொழி பற்றிய வாசகங்கள் கல்லூரி வளாகத்தில் ஒட்டப்பட்டது.

❖ 12.03.2014 அன்று நாடாளுமன்ற தேர்தல் 2014 முன்னிட்டு வாக்காளர் விழிப்புணர்வு பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்தின் நடுவராக திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் திரு. கு. கதிரேசன் M.A., M.Phil., Ph.D அவர்கள் பங்கேற்றார். "இன்றைய வாக்காளர்கள் விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள்! விழிப்புணர்வுடன் இல்லை" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. வாக்காளர்கள் விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள் எனும் தலைப்பில் பொருளியல் இரண்டாமாண்டு மாணவி மு. சுமிதா, கணிதவியல் மூன்றாமாண்டு மாணவி ஆ. கவிதா, வணிக நிர்வாகவியல் முதலாமாண்டு மாணவி வனப்பவித்ரா ஆகியோர் வாதம் செய்தனர். வாக்காளர்கள் விழிப்புணர்வுடன் இல்லை எனும் தலைப்பில் கணிப்பொறியியல் மூன்றாமாண்டு மாணவி ஐநூல் சாபிரா, வணிக நிர்வாகவியல் முதலாமாண்டு மாணவி சண்முகப் பிரியா, ஆங்கில இலக்கியம் இரண்டாமாண்டு மாணவி கோ. கலையரசி ஆகியோர் வாதம் செய்தனர். இறுதியாக வாக்காளர்கள் விழிப்புணர்வுடன் இல்லை என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. நம் கல்லூரி முதல்வர் முனைவர் வே. சசிகலா M.A., M.Phil., Ph.D., அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள்.

இவ்வாறாக உமறுப்புலவர் முத்தமிழ் மன்றம் 2013 – 2014ம் கல்வி ஆண்டில் தனது மன்ற செயல்பாடுகளை சிறப்புற செயலாற்றி உள்ளது.